1982 மார்ச் 2]

கொண்டிருக்கின்றது. 35,000 டன் காகித உற்பத்தி செய்து கொண்டிருந்த அந்த நிறுவனம் இப்போது விரிவாக்கம் செய்யப் பட்டு 50,000 டன் காகித உற்பத்தி செய்கின்றது. 15 கோடி ரூபாய்க்கு மேலே கடன் வாங்கி இந்த ஆலையை விஸ்தரிப்பு செய்திருக்கின்ற காரணத்தாலே மேலும் 15,000 டன் உற்பத்தி ஆகின்றது என்கின்றபோது அதன் மூலம் பல்வேறு வகைகளில் தமிழக அரசுக்கு வருவாய் இருக்கின்றது. தொழிலாளர் களுக்கும் வேலை வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அங்கே 22 ரூபாய்க்கு கொடுத்து இன்னொரு பக்கத் திலே ஒரு டன் பேப்பரை அந்த நிறுவனம் தயாரித்து அதன் மூலம் 540 ரூபாயை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவே இந்த அடிப்படைகளை யெல்லாம் மனதில் வைத்துத் தான் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது வருகிற ஆண்டிலிருந்து மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் விலையை நீடிக்காமல் வைத்திருக் கிறோம்.

விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு நியாய விலை கிடைக்க அரசு மேற் கொண்ட நடவடிக்கைகள்.

*வினா எண். 308—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை அவர்கள் நல்ல விலைக்கு விற்க இந்த அரசு என்ன நடவடிக்கைகள் மேற் கொண்டுள்ளன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பொருள் விற்பனைச் சட்டத்தின் கீழ் விற்பனைக் கூடங்கள் திறக்கப்பட்டு உற்பத்தி செய்கின்ற பொருள்களை விவசாயிகள் நல்ல விலைக்கு விற்க தகுந்த நட வடிக்கை அரசு எடுத்திருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு நியாயமான நல்ல விலை கிடைக்க தற்போது ஒவ்வொரு வட்டத்திலும் தாலுக்காவிற்கு ஒன்று என்ற வீதத்தில் மார்க்கெட்டிங் கமிட்டி யார்டு இருக்கிறது. அந்த மார்க்கெட்டிங் கமிட்டிகளை ஒவ் வொரு ஒன்றியத்திற்கும் ஒன்றாக அமைக்க அரசு ஆணை பிறப் பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிடமிருந்து 102.44 கோடி ரூபாய் உதவி பெற்று இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த மேற் கொண்டிருக் கிறோம். ஆனால் ஒன்றியத்திற்கு ஒன்று என்ற அளவில் அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

திரு. எம். பி. இரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கு நேரிடையாக வியாபாரிகள் சென்று விவசாய விளை பொருள்களை வாங்க மறுப்பதாக தகவல்கள் ஏதாவது அரசுக்கு வந்துள்ளதா? அப் படியானால் தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அப்படித் தகவல்கள் இல்லை

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, ஒன்றியத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் விற்பனைக் கூடங் களை அமைக்க இயலாது என்று அமைச்சர் அ ர்கள் சொன்னார் கள். இப்பொழுது தாலுக்காவிற்கு ஒன்று என்று இருக்கிறது. ஆனால் இவைகளின் நிர்வாகம் எல்லாம் மாவட்ட அளவிலே ஒன்றாக இருக்கிறது. வட மாநிலங்களிலே ஒவ்வொரு ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களையும் தனித் தனியாக வைத்து செம்மையாக நடைபெறுவதாகச் சொல்கிறார்களே. அது போன்று மாற்றி அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்தில் மிகச் சிறப்பான முறையிலே தான் இந்த விற்பனைக் கூடங்கள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. உலக வங்கியின் உதவியோடு இதனை இன்னும் விரிவு படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்கள் இங்கே வண்டி/வாகனங்கள் போன்றவற்றைக் கொண்டு வந்து நிறுத்தி தங்களுடைய விளை பொருள்களை விற்பனை செய்வதற்கும், தேவையான பொருள்களை வாங்கிச் செல்வதற் கும் நிதி உதவி பெறும்பொருட்டு வங்கிகளின் வசதிகளையும் இணைத்து அங்கேயே பொருட்களை வாங்கவும், விற்கவும் வகை செய்யப்பட்டு வருகிறது. ஒன்றியத்திற்கு ஒன்று என்ற வகை யில் இதனை அமைக்க நடைமுறையில் சாத்தியம் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விற்பனைக் கூடங்களில் தற்போது விவசாயிகளுக்கு சரி யாக விலை கிடைக்கவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். சென்ற ஆண்டு 1,700 ரூபாய்க்கு விற்ற மிளகாய் வத்தல் விலை இந்த ஆண்டு

1982 மார்ச் 2]

700 ரூபாய்க்கு தான் போகிறது. மத்திய அரசினுடைய விவசாயத்துறை அமைச்சர் திரு. பீரேந்திரசிங் அவர்கள் பாராளுமன்றத்தில் கூறியது பத்திரிகைகளில் செய்தியாக இன்று வந்துள்ளது. அதில் மாநில அரசுகளில் தமிழகம் மட்டும் தான் விலையை அதிகமாக்க வேண்டும் என்பதில் எந்த அபிப்பிராயமும் சொல்லவில்லை—விட்டு விட்டார்கள் என்று. ஆகவே மத்திய அரசாங்கத்தினுடைய விலை நிர்ணயக் கொள்கையை கண்டித்து இன்னும் அதிகமான விலையை அல்லது நியாயமான விலையை நிர்ணயித்து அது விவசாயிகளுக்கு கிடைக்கும்படிச் செய்ய நம்முடைய அரசு உடனடியாக, உறுதியாக முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அவ்வாறு கருத்து தெரிவித்திருந்தால், அது தவறான கருத்தாகும். நம்முடைய அரசின் சார்பாக பலமுறை இந்த விலை நிர்ணயம் குறித்து, நானும், மின்சாரத்துறை அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் கூறியிருக்கிறோம். விலை நிர்ணயக் கூட்டங்களிலே கூட கலந்து கொண்டு சொல்லியிருக்கிறோம்.

## தென்னாற்காடு மாவட்ட சிறு விவசாயிகளுக்கு இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் வாங்க மானியம் வழங்கும் திட்டம்.

*வினா எண். 309—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்ட சிறு விவசாயிகளுக்கு வறட்சி துயர் துடைப்பு திட்டத்தின் கீழ், இரசாயன உரங்களுக்கும் பூச்சி கொல்லி மருந்துக்கும் மானியம் வழங்கப்பட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் இது பற்றிய விவரம் என்ன ?

(இ) இத் திட்டத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது ?

(ஈ) இத் திட்டம் வேறு எந்த மாவட்டங்களில் செயல் படுத்தப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) வறட்சி துயர் துடைப்பு திட்டத்தின் கீழ், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கிராமங்களில் உள்ள சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு, நெல், பருத்தி, பருப்புகள், நிலக்கடலை,